27 03 2025 Thursday 7 15 Pm

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வரும் ஆண்டிற்கான நிதி மசோதா மற்றும் நிதி ஒதுக்கீட்டு மசோதாவை மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் இன்று மாநிலங்களவையில் தாக்கல் செய்தார்.
- விவசாயிகளின் விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை கிடைப்பதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக் கொண்டுள்ளார்.
- வடகிழக்கு மாநிலங்களில் நடப்பாண்டில் 11 ஆயிரத்து தொள்ளாயிரத்து 76 கோடி ரூபாய் மதிப்பிலான நெடுஞ்சாலைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.
- இலங்கை கடற்படையினரால் இன்று கைது செய்யப்பட்ட 11 பேர் உட்பட 147 தமிழக மீனவர்களை இலங்கை அரசு உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கமாறு தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.
- சென்னை சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Akash Pal – Poymantee Baisya இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

வரும் ஆண்டுக்கான நிதி மசோதா மற்றும் நிதி ஒதுக்கீட்டு மசோதாவை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று மாநிலங்களவையில் தாக்கல் செய்தார்.

2025-26-ஆம் நிதியாண்டில் மத்திய அரசின் செலவினங்களுக்கான முன்வரைவுகளுக்கு நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெற இம்மசோதா வகை செய்கிறது.

மசோதா மீதான விவாதத்தை தொடங்கிவைத்து பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு ப சிதம்பரம், உணவுப் பொருட்களின் பணவீக்கம், வேலைவாய்ப்பின்மை ஆகியவை அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

கல்வி மற்றும் சுகாதார கட்டமைப்புகள் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

வேலைவாய்ப்பின்மை சதவீதம் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், ஊதிய விகிதங்கள் மிக குறைவாக உள்ளதாகவும், இதனால் மக்களின் நுகர்வு கணிசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதே காரணத்தால், டாலருக்கு நிகரான ரூபாயில் மதிப்பு குறைந்து வருவதாகவும், தனிநபரின் சேமிப்பு கடுமையாக பாதிக்கப்பட்டு, மக்களின் கடன் சுமை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

>>>>><<<<<

பட்ஜெட்டில் கல்வி, மருத்துவம், உள்ளிட்டவைகளுக்கான ஒதுக்கீடு அதிக அளவில் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

பிஜேபி உறுப்பினர் திரு ஆர் பி என் சிங், கடந்த பத்தாண்டுகளில் அனைத்துத்துறைகளிலும் நாடு வளர்ச்சி பெற்று வருவதாக தெரிவித்தார்.

விவசாயிகள், சமூகத்தில் பொருளாதார ரீதியாக நலிவுற்ற பிரிவினர் ஆகியோருக்கான திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு நிறைவேற்றி வருவதாகவும் அவர் கூறினார்.

நடுத்தர மக்களின் மேம்பாட்டுக்காகவும், அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

சரக்கு மற்றும் சேவை வரி நாட்டிற்கு பெரிதும் உதவி வருவதாக கூறிய் திரு ஆர் பி என் சிங், மற்ற வரிகள் உயராமல் இருப்பதை இது தடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மக்களவையில் இம்மசோதா ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது.

>>>>><<<<<

விவசாயிகளின் விளைப்பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை கிடைப்பதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு விவசாயிகளின் நலன்களை காப்பதற்கு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக கூறினார்.

பருப்பு வகைகள் உற்பத்தியில் தன்னிறைவை எட்டுவதற்கு பருப்பு உற்பத்தி செய்யும் மாநிலங்கள் முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பருப்பு வகைகள் இறக்குமதியை குறைக்க வேண்டுமெனில், உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார்.

துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு மற்றும் பிற பயறு வகைகளை குறைந்தபட்ச ஆதரவு விலையில், நடப்பாண்டில் 100 சதவீதம் கொள்முதல் செய்வதற்கு மாநிலங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் ஒன்பது லட்சத்து 40 ஆயிரம் டன் கொப்பரை தேங்காய்களை கொள்முதல் செய்வதற்கும் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

>>>>><<<<<

வடகிழக்கு மாநிலங்களில் நடப்பாண்டில் 11 ஆயிரத்து தொள்ளாயிரத்து 76 கோடி ரூபாய் மதிப்பில் நெடுஞ்சாலை திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.
மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதை தெரிவித்த அவர், நான்காயிரத்து 352 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நிறைவடைந்துள்ளதாக குறிப்பிட்டார்.
தற்போது நடைபெற்றுவரும் நெடுஞ்சாலைப்பணிகள் 2028-ஆம் ஆண்டிற்குள் நிறைவடையும் என்றும் திரு நிதின்கட்கரி கூறினார்.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் இன்று மேலும் இரண்டு பிரிவினைவாத குழுக்கள் தங்களது ஆயுதங்களை கைவிட்டு, இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளதை வரவேற்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, பிரிவினைவாதத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து வெற்றிபெற்று வருவதாகவும் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

>>>>><<<<<

குடியுரிமை மற்றும் வெளிநாட்டு பிரஜைகளுக்கான மசோதா மீது இன்று மக்களவையில் விவாதம் நடைபெற்றது.

பாஸ்போர்ட் மற்றும் பயண ஆவணங்கள், விசா மற்றும் குடியுரிமை பதிவு ஆகியவற்றில் மத்திய அரசுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவதற்கு இந்த மசோதா வகை செய்கிறது.

மின்னணு கட்டமைப்பில் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுவரும் நிலையில், குடியுரிமை தொடர்பாக விரைந்து முடிவெடுக்க இந்த புதிய சட்டம் வழிவகை செய்கிறது.

குடியுரிமை தொடர்பான பல சட்டங்களை பயன்படுத்துவதில் ஏற்படும் குழப்பங்களை நீக்கும் நோக்கில் இது கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த மசோதா மீதான விவாதத்தை தொடங்கிவைத்து பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு மணீஷ் திவாரி, அரசியல் சாசன நடைமுறைகளுக்கு எதிரான வகையில் இந்த மசோதா அமைந்துள்ளதாகவும்,

குடியுரிமை அதிகாரிகளுக்கு அதிக அளவில் அதிகாரம் வழங்கப்படுவதால், மக்கள் இன்னலுக்கு ஆளாக நேரிடும் என்றும் குறிப்பிட்டார்.

மக்களின் பாதுகாப்பு குறித்து இம்மசோதாவில் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும், இதுகுறித்து முடிவெடுக்க நாடாளுமன்றக் கூட்டு குழுவின் பரிசீலனைக்கு இம்மசோதாவை அனுப்ப வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பிஜேபி உறுப்பினர் திருமதி அபரஜிதா சாரங்கி, நாட்டின் பாரம்பரியமும், கலாச்சாரமும் அனைவருக்கும் மதிப்பளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக கூறினார்.

நாட்டின் எல்லைப்பகுதியில், பாதுகாப்பை உறுதி செய்யவும், உள்நாட்டு நலனை காப்பதற்கும் வலுவானதொரு குடியுரிமைச்சட்டம் தேவைப்படுவதாக அவர் தெரிவித்தார்.

திமுக உறுப்பினர் திருமதி கனிமொழி, மத்திய அரசு கொண்டுவரும் குடியுரிமை மற்றும் வெளிநாட்டு பிரஜைகளுக்கான மசோதா, வெளிநாடு வாழ் இந்தியர்களை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாக கூறினார்.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் புலம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள 19 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கை தமிழர் குடும்பங்களை பாதிக்கும் வகையில் இந்த மசோதா அமைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

புலம்பெயர்ந்துள்ள அகதிகளின் நிலைமையை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு இடர்பாடு இல்லாத வகையில், இந்த மசோதாவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திருமதி கனிமொழி வலியுறுத்தினார்.

>>>>><<<<<

இலங்கை கடற்படையினரால் இன்று கைது செய்யப்பட்டுள்ள 11 மீனவர்கள் உட்பட இலங்கை சிறைகளில் உள்ள 147 மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் அதிக அளவில் தொடர்ந்து கைது செய்யப்படுவதை தடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கை சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க தூதரக மற்றும் சட்ட உதவிகளை வழங்கிட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கை அதிபர் இந்தியா வந்திருந்த போது, தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் பிரச்சினை குறித்து தாம் கேட்டுக் கொண்டதையும் அவர் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதை தடுக்க, முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் தூதரக முயற்சிகளை தீவிரப்படுத்த வேண்டும் என்றும் முதலமைச்சர் அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

கிராமப்புறங்களில் அதிவேக இணைய சேவையை வழங்குவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் தொலைத்தொடர்புத்துறை மற்றும் நபார்டு வங்கி இடையே இன்று கையெழுத்தானது.

புதுதில்லியில், மத்திய தொலைத்தொடர்புத்துறை செயலர் திரு நீரஜ் மிட்டல், முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

பாரத் நெட் திட்டத்தின்கீழ், நபார்டு வங்கியின்கீழ் செயல்படும் வேளாண் கடன் சங்கங்களுக்கு அதிகவேக பிராண்ட் பேண்ட் இணைப்பை வழங்குவதற்கு இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

>>>>><<<<<

கர்நாடகா, திரிபுரா மாநிலங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு இரண்டாவது தவணையாக இன்று 436 கோடி ரூபாயை விடுவித்துள்ளது.

15-ஆவது நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், நடப்பு நிதியாண்டிற்கு ஒதுக்கப்பட்ட இந்த தொகையில், கர்நாடகாவிற்கு 404 கோடி ரூபாயும், திரிபுராவிற்கு 31 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

*விளையாட்டுச் செய்திகள்*

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Akash Pal – Poymantee Baisya இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, ஆஸ்திரேலியாவின் Nicholaslum - சிங்கப்பூரின் Zeng Jian இணையை 11-6, 11-7, 11-8 என்ற செட்கணக்கில் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவில் Diya Chitale – Yashaswini Ghorpade இணையும் காலிறுதிக்கு முன்னேறியது.

>>>>><<<<<

ஆசிய கோப்பை மூவர் கூடைப்பந்து போட்டியில் பங்கேற்க இந்தியா தகுதி பெற்றுள்ளது.

>>>>>END<<<<<